## வெளி நாட்டவரின் தொண்டு

முதன் முதலில் வெளிநாட்டுத் திருத்தொண்டர்களே தமிழிசையை வளர்த்தனர். அவர்களுள் வீரமாமுனிவர், கால்டுவெல், சாண்டலர், வாஷ்பர்ன், வெப், இம்மான் ஈஒய்ட் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். வீரமாமுனிவர், வெப், இம்மான் ஒய்ட் ஆகியோரின் பணிகளை மட்டும் காண்போம்.

## வீரமா முனிவர்

தமிழிசையில் கிறிஸ்தவப் பாடல்களை இயற்றி பாடச்செய்தவரில் ஆதிப்பிதா இவரே. இவரின் ‘‘தேம்பாவணியில் வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, துறை, தாழிசை விருத்தம் முதலிய பாவகைகளில் 3675 பாடல்கள் அமைத்துள்ளார். 60 கண்ணிகளைக் கொண்ட வெண்பாக்கள் விருத்தப்பாவில் 90 வர்ணங்களை அறிமுகப்படுத்தி ‘‘அடைக்கலமாலை’’ யில் பாடியுள்ளார். தமிழிசையில் ‘‘சந்தம்’’ மிக முக்கியமானதொன்று, கம்பரின் 1266 பாடல்களில் 87 சந்தங்கள் உள்ளன. வீரமாமுனிவர் 3615 பாடல்களில் 90 சந்தங்கள் அமைத்துள்ளார். அனைத்திற்கும் மேலாகத் தமிழ்மொழியினை ஆய்வு செய்தும், வளப்படுத்தியும், நான்கு அகராதிகள் எழுதியும் திருக்குறளை மொழிபெயர்ப்பு செய்தும், தமிழாழம் கண்ட இத்தாலிய முனிவர் ‘‘வட்டமிழ கேட்ட மடக்கிளி’’ என தம் தமிழ்த்திறனை அவையடக்கத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

## அருள்திரு வெப்

கிறிஸ்தவக் கீர்த்தனைகளின் பயன்பாட்டிற்கு ஆதாரம் இவரே. 1846ல் மதுரையில் பணியாற்றிய போது தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரிடம் 8 வாலிபரையனுப்பி கற்றுவரச் செய்தார். பின் இவ்வெண்மரை கிராமச் சபைகளுக்கு அனுப்பி கீர்த்தனைகளைக் கற்பித்தார். 1853இல் ‘‘ஞான கீதங்கள்’’ எனும் கீர்த்தனைத் தொகுப்பினை முதன் முதலில் வெளியிட்டார். தமிழக் கவிஞராகி கீர்த்தனைகளையும் எழுதினார். அமெரிக்கராயினும் தமிழராகவே வாழ்ந்து தமிழிசைக்குப் பெரிதும் தொண்டாற்றினார்.

## அருள்திரு. இம்மான் ஈஒய்ட்

40 ஆண்டுகள் தமிழகத்தில் எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளையின் பாடல்களைக் கொண்டு இந்திய நாட்டு இராகத்தில் பாடி காலட்சேபம் செய்த மேனாட்டவர் இவரொருவரே. காலட்சேப முடிவில் இரட்சண்ய மனோகரத்திலிருந்தும் பாடுவார். ‘‘தமிழ்மக்களின் ஞானம்’’ என்ற நூலை எழுதினார். மேலும், தமிழிசை பயின்றும், பாடியும் பரப்பியும் உதவிய சீகன்பால்க், பெப்ரீஷியஸ், சாண்ட்லர், வாஷ்பர்ன், எச்.ஏ.பாப்லி ஆகிய மேனாட்டுத் திருத்தூதுவர் ஆற்றிய இசைப்பணியினால் கிறிஸ்துவரிடையே இன்றும் கீர்த்தனைகள் பரவலாகப் பயன்பாட்டில் உள்ளன.

**தமிழ்நாட்டவரின் தொண்டு**

இசைத் தமிழுக்குத் தொண்டாற்றியவரில் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ஜான்பால்மர், சாமுவேல் பவுல் ஐயர், எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை, ஜி.சே.வேதநாயகம், வச்சிரமணி குடும்பத்தவர், ஆபிரகாம் பண்டிதர், தேவநேயப் பாவணர், வீ.ப.க.சுந்தரனார், சந்தியாகு, மரியான், ஓய்.எம்.சாலமன், ஞா.சாமுவேல், வேதநாயகம் பிள்ளை, வே.மாசிலாமணி, சவரிராயன் ஏசுதாசனார், சத்திய சாட்சி, தயானந்தன் பிரான்சிஸ், டிஐ.ஜேக்கப் ஆகியவரோடு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெபனேசன் அர்னால்டு, ஜே.எஸ்.கிறிஸ்மஸ், பிரிக்கண்ரிட்ஜ், புலவர் எஸ்.எஸ்.எரேமியா, அம்பாவாணர், ஆலன் ஆபிரகாம் மற்றும் பலர் தமிழிசைக் கீர்த்தனைகளை எழுதி பாடி இன்றும் பலரைப் பாடவைத்துள்ளனர்.

**வேதநாயக சாஸ்திரியார்**

ஐந்தாயிரம் ஆண்டுகளாக உபநிடதங்கள் இசைவடிவிலேயே பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. அன்னமாச்சியார் (1408 – 1503) முதலில் இசைக்குப் பல்லவி, கானம் என அறிமுகப்படுத்தினார். இவரையடுத்து இசைப்பாடல்களை எழுதி, இசையமைத்து இசைக்கருவிகளுடன் பாடி, பலரையும் பாடவைத்த தமிழ்க் கவிகளில் முதன்மையானவர் தஞ்சை தேவநாயக சாஸ்திரியானவர்.

இவர் ‘‘ஞானதீபக் கீர்த்தனை’’ நூலை எழுதினார். 40 ஆண்டுகள் செலவிட்டு ஜெபமாலை நூலை வெளியிட்டார். இசைத்தமிழ் தொண்டிற்கு இந்நூல் மணிமகுடமாக விளங்குகிறது. ‘‘மேலைநாட்டு இசைமுறையைத் தவிர்த்து நம் நாட்டின் பண்பிற்கேற்ப இராகம் தாளங்களைப் பயன்படுத்தியே இந்நூலை எழுதினேன் என்றார். ஆங்காங்கே தேவாரப்பணிகளைப் பின்பற்றியுள்ளார். இசையிலக்கியங்களுக்கு 5 நூற்களை எழுதியுள்ளார்.

**ஜான்பால்மர்**

இவரின் ‘‘கிறிஸ்தாயனம் காவியத்தில்’’ 842 பாடல்களும், ‘‘சத்தியவேத சரித்திரக் கீர்த்தனை’’ ‘‘பேரானந்த கும்மி’’ ஆகியவற்றில் 200க்கும் மேற்பட்ட கீர்த்தனைகளைப் படைத்துள்ளனர். இவற்றில் 27 இராகங்களும், 8 வகைத்தாளங்களுடனும் பயன்படுத்தியுள்ளனர்.

**எச். ஏ. கிருஷ்ணபிள்ளை**

தேவாரப் பண்களைப் பயன்படுத்தி பதினொரு தேவாரங்களை இயற்றினார். இரட்சண்ய யாத்ரீகத்தில் 3813 பாடல்களையும், இரட்சண்ய மனோகரத்தில் 566 பாடல்களையும், காவிய தரும் சங்கிரத்தில் 2500 பாடல்களையும் எழுதியுள்ளார்.

**ஜயார்ஜ் சேர்வை வேதநாயகம்**

இவரும் சாஸ்திரியார் போன்று ஒரு மக்கள் கவிஞராவார். அமலகுரு சதகம் 100, சற்குருசதகம் 100, நெஞ்சுருகு கட்கம் 260, மாதர்கும்மி 300, ஆடவர்கும்மி 341, பரலோகராஜ்ய பாமாலை 40, நித்தியானந்த காதல் 800, படகோட்டிப்பாட்டு, ஏற்றப்பாட்டு, ஆகிய நூல்களையும், அங்கமாலை பாடலும் எழுதியுள்ளார். இவரின் பல பாடல் நூற்கள் இன்னும் வெளிவரவில்லை.

**தூத்துக்குடி வச்சிரமணி குடும்பத்து மூவர்**

இவர்களின் தமிழிசைத் தொண்டினை ஆய்வு செய்து ‘‘இலக்கியப் புதையல்’’ எனும் நூலினை திரு.ஜான் ஜெயந்தன் வெளியிட்டுள்ளார். இவர்கள் 574 கீர்த்தனைகளை 28 இராகங்களில் எழுதியுள்ளார். வழக்கிலிருந்த இராகங்களைப் பயன்படுத்தி பலரையும் பாடச்செய்துள்ளமை பாராட்டத்தக்க பணியாகும். இலக்கிய இசைப்பண்ணையில் வளமூட்டி இசைப்பயிர் வளர்த்துள்ளனர்.